www.Padasalai.Net www.TrbTnpsc.com

ஜெபா'ஸ் மாதா பதிப்பகம்

# TET – 2017

## New Syllabus

**ஜெபா'ஸ் குழந்தை மேம்பாடு மற்றும் உளவியல் கையேடு**

**TET உளவியலுக்கென பிரத்யேகமாக தயாரிக்கப்பட்டுள்ளது**

| | | |
|---|---|---|
| 1 | மொத்த பக்கம் | 274 பக்கம் |
| 2 | பாடப்பகுதி | 169 பக்கம் |
| 3 | தேர்வு குறிப்புகள் | 9 பக்கம் |
| 4 | வினா – விடைகள் | 1000 |
| 5 | முந்தைய தேர்வு வினா – விடைகள் | 90 வினா – விடைகள் |
| 6 | மொழி | தமிழ் |
| 7 | தாள் | 80 GSM |
| 8 | விலை | **Rs. 200 மட்டுமே** |

**முதுகலை பட்டதாரிக்கான கல்வியியல் கையேடு ( TRB - PG) ம் கிடைக்கும்**

**முழுமையான கையேடு பெற**

**8870046363 9047106661**

தொடர்புக்கு 887004 6363 904710 6661

www.Padasalai.Net

http://www.trbtnpsc.com/2013/08/tet-study-materials-latest-schedules.html

**அலகு – 10**

| வ.எண் | பொருளடக்கம் | |
|---|---|---|
| 1 | வழிகாட்டுதலின் தன்மைகள் | Nature of Guidance |
| 2 | வழிகாட்டுதலின் வகைகள் | Types of Guidance |
| 3 | வழிகாட்டுதலின் தேவைகள் | Need of Guidance |
| 4 | அறிவுரை பகர்தலின் தன்மைகள் | Nature of Counseling |
| 5 | அறிவுரை பகர்தலின் வகைகள் | Types of Councelling |
| 6 | அறிவுரை பகர்தலின் தேவைகள் | Need of Counseling |
| 7 | கல்வி வழிகாட்டல் | Educational Guidance |
| 8 | தொழில் வழிகாட்டல் | Vocational Guidance |
| 9 | தனிப்பட்ட வழிகாட்டல் | Personal Guidance |
| 10 | அறிவுரை தேவைப்படும் மாணவர்களை கண்டறிதல் | Identification of children with Counseling needs |
| 11 | அறிவுரை பகர்தலின் நுணுக்கங்கள் | Counseling Techniques |
| 12 | கற்றல் குறைபாடு உடைய மாணவர்களுக்கு வழிகாட்டுதல் | Guidance for the Children with learning difficulties |
| 13 | குறைநிலை சாதனையாளர்களுக்கு வழிகாட்டல் | Guidance for Under Achievers |
| 14 | மீத்திறன் மிக்க குழந்தைகளுக்கு வழிகாட்டல் | Guidance for Gifted Children |



http://www.trbtnpsc.com/2013/08/tet-study-materials-latest-schedules.html

## வழிகாட்டல் (Guidance) மற்றும் அறிவுரை பகர்தல் (Counseling)

ஒரு தனிமனிதன் மற்றொரு தனிமனிதனுக்கு, அவனது உடல் மற்றும் சமூகச்சூழல் சம்பந்தப்பட்ட பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கும், சமுதாயத்தில் சிறப்பாக வாழ்வதற்கும் தரும் உதவிக்கு வழிகாட்டல் என்று பெயர்.

**வரையறை (Definitions)**

| | |
|---|---|
| கெல்லி | மாணவர்களை முழு வளர்ச்சி அடையச் செய்யும் செயலே வழிகாட்டல் என கூறுகிறார். |
| ஹம்ப்ரீஸ் & டிரெக்ஸ்லர் | வழிகாட்டல் என்பது ஒரு தனிமனிதன் எந்தநிலையிலும் அவனுடைய அறிவு வளர்ச்சிக்கும், சுய வேகத்திற்கும் சமூக மற்றும் மனவெழுச்சி திறனுக்கும் ஏற்றவாறு கொடுக்கப்படும் சுய உதவியே ஆகும். |
| ரூத் ஸ்டிராங் | வழிகாட்டல் என்பது ஒரு தனிமனிதனின் மகிழ்ச்சி, சமூக பயன்பாடு இவற்றின் பொருட்டு அவனுடைய வளர்ச்சி நிலைகளில் அவனுடைய சொந்த முயற்சிகளின் மூலமாக உதவும் செயல்பாடு ஆகும். |
| ஆலிஸ் குரோ & லெஸ்டர் குரோ | “எல்லா வழிகாட்டலின் அடிப்படைக் கருத்து வழிகாட்டல் திறமை பெற்றவர். மற்றொருவருக்கு, வாழ்க்கை வளம்பெற தக்கதொரு முடிவு எடுக்க உதவி செய்வார். அம்முடிவுகளைச் செயல்படுத்த உதவுவார்.” |
| கிட்சன் | வழிகாட்டுதல் என்பது தனிநபர் கல்வி முறையாகும். அனைத்து நிலைகளிலும் ஒவ்வொரு மாணவனையும் அதிகபட்ச வளர்ச்சி நிலைக்குத் தன்னைத்தானே உயர்த்திக்கொள்ள உதவுவதாகும் என்கிறார். |
| ஆர்தர் ஜெ.ஜோான்ஸ் | ஒருவனுடைய வாழ்க்கையை முழுமையாக கருதி, வழிகாட்டல் என்பது அவனுடைய தேவை இயல்பான ஆற்றலை மதிப்பிடல், வாழ்க்கையின் இலக்குகளை வளர்த்தல் போன்றவைகளுக்கு உதவுகின்றன. இந்த இலக்குகளை அடைவதில் திட்டம் உருவாக்கல், அதன் வழியே அவ்விலக்குகளை அடைதல் போன்றவைகளுக்கு உதவுகின்றன. இந்த இலக்குகளை அடைவதில் திட்டம் உருவாக்கல், அதன் வழியே அவ்விலக்கினை அடைதல் போன்றவைகளுக்கு வழிகாட்டல் தனிப்பட்ட திருப்தியை அளிப்பதோடு மட்டுமல்லாமல் சமுதாயம் விரும்பக்கூடியதற்கும் உதவுகின்றது என்று கூறுகிறார். |
| மேத்யூசன் | “மாணவர் ஒவ்வொருவரும் தனது குணங்களையும் திறன்களையும் முறையாக கண்டறிந்து புரிந்து அவற்றை முழுமையாக சமூக தேவைகளுக்கேற்பவும் |



http://www.trbtnpsc.com/2013/08/tet-study-materials-latest-schedules.html

வாய்ப்பிற்கேற்பவும் பயன்படுத்துவது ஆகும்.

| | |
|---|---|
| குட் | "வழிகாட்டுதல் என்பது தனிநபரின் மனப்பான்மைகளையும் அதனைச் சார்ந்த நடத்தைகளையும் மாற்றியமைக்கக் கூடிய வகையில் வடிவமைக்கப்பட்ட தனிமனித உறவுமுறை சார்ந்த செயல்பாடாகும்." |
| ஹேய்ட் | வழிகாட்டல் என்பது மாணவர் வளர்ச்சிக்குத் தேவையான பல்வேறு பணிகளின் தொகுப்பே வழிகாட்டல் எனப்படும். |
| நாப்ஸ் | தனிப்பட்ட மாணவர்களை பற்றி கற்றல், அவனுக்கு அவனை பற்றி புரிந்துக்கொள்ள உதவுதல், அவனிடம் ஏற்படும் மாறுதல்கள், அவனது வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் உதவும் சூழ்நிலைகள் பற்றிய விழிப்புணர்வும் வழிகாட்டலின் தன்மைகளாகும். |
| கூஸ்கே.ஃ.பவர் | வழிகாட்டல் என்பது இருநிலைகளை உடையது.<br>1. வழங்கல் நிலை இதன் மூலம் மாணவர்கள் கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளுக்கு தேவையான வழிகாட்டல் வழங்கப்படுகிறது.<br>2. அனுசரிக்கும் நிலை இதன் மூலம் மாணவர்கள் அவருக்கு கிடைக்கும் வாய்ப்புகளுக்கு ஏற்ப அனுசரித்து நடக்கும் பயிற்சியை வழிகாட்டல் என்கிறோம். |
| புராக்டர் | வழிகாட்டல் என்பது தனிநபர் அல்லது தனிநபர்களை கொண்ட குழுக்கள் சூழ்நிலைக்கு ஏற்ப தங்களை அனுசரித்து நடக்க பள்ளியின் உள்ளேயும் வெளியேயும் பயிற்சி அளித்தல் ஆகும். |

## வழிகாட்டுதலின் தன்மைகள் (Nature)

- வழிகாட்டல் தனி நபருக்குரியது. வழிகாட்டல் முறைகள் தனிநபருக்கேற்ப அவர்களின் சூழலுக்கேற்ப வேறுபடக்கூடியது
- தனிநபர் வேறுபாடுகளை மதிப்பது¸ வேறுபாடுகளுக்கேற்ப வழிகாட்டல் அறிவுரை வழங்கல் வேறுபடக்கூடியது
- சொந்தமாக, சுயமாக முடிவெடுக்கப்பட வேண்டியது அவசியம், வழிகாட்டுபவர் முடிவிற்கு வழிகாட்ட முடியுமே தவிர தனிநபரே சுயமாக முடிவெடுக்க வேண்டும்
- வழிகாட்டல், அறிவுரை வழங்கல் இணைந்த செயல் ஆகும். கட்டாயப்படுத்தப்பட வேண்டியதில்லை
- தனிநபரின் முழுமை பண்புக்குறியது ஒரு பண்பிற்கு மட்டுமல்ல. தனிநபரின் ஒட்டுமொத்த பண்புகளுக்கும் உதவக்கூடியது
- படிப்படியாக நன்கு ஒருங்கமைக்கப்பட்டு செயல்படுத்தப்படக் கூடியது





www.Padasalai.Net

## வழிகாட்டுதலின் தேவைகள் (Needs)

- சிக்கலான சமுதாயம்
- தனியாள் வேற்றுமை
- தனியாளின் மனநிலை
- கல்வி மற்றும் தொழில் அமைப்புகளில் மாற்றம்
- பொருளாதார அமைப்பில் மாற்றம்
- மனித ஆற்றலைப் பயன்படுத்துதல்
- ஓய்வு நேரத்தைப் பயன்படுத்துதல்
- நெறிபிறழ்வு குழந்தைகள்
- நாட்டின் மக்கள் தொகை பெருக்கம்

## வழிகாட்டுதலின் அடிப்படைக் கருத்துக்கள் / கொள்கைகள் (Principles of Guidance)

- வழிகாட்டல் ஒரு மெதுவான வளர்ச்சியைக் கொண்டதாகும்.
- வழிகாட்டுதல் ஒரு தொடர்ச்சியான செயல்பாடாகும்.
- பிரச்சனைகள் ஒன்றுக்கொன்று தொடர்புடையது.
- இது உட்காட்சியை வளர்ச்சியடையச் செய்கிறது.
- தனியாள் எதிர்கொள்ளப்படும் பிரச்சனைகள்
- வழிகாட்டல் தனியாள் வேற்றுமையை அடிப்படையாகக் கொண்டது.
- வழிகாட்டல் ஒரு திட்டமிட்ட சேவை.
- வழிகாட்டல் அனைவருக்கும் பொதுவானது.

## வழிகாட்டலின் வகைகள் (Kinds of Guidance)

1. கல்வி வழிகாட்டல்
2. தொழில் வழிகாட்டல்
3. தனிப்பட்ட வழிகாட்டல்
4. சமூக வழிகாட்டல்

தொடர்புக்கு 887004 6363 904710 6661

ஜெபா'ஸ் மாதா பதிப்பகம்

## கல்வி வழிகாட்டல்

| | |
|---|---|
| ஆர்தர்.ஜெ. ஜோன்ஸ் | பள்ளி பாடத்திட்டத்திலும், பள்ளி செயல்பாடுகளிலும் மாணவர்களுக்கு உதவி புரிந்து அவர்களுடைய கல்வி தொடர்புடைய தெரிவுகளையும், இணக்கங்களையும், மேம்படுத்த உதவுதல் கல்வி வழிகாட்டல் ஆகும். |
| ரூத் ஸ்டிரேங் | ஒருவன் தனக்கேற்ற திட்டத்தை, செயல்களைத் தேர்ந்தெடுக்க உதவுதல் கல்வி வழிகாட்டல் ஆகும். |

- ஆர்வம், திறன், பொருளாதார நிலைக்கேற்ப பாடங்களை தேர்ந்தெடுக்கவும்.
- பள்ளியில் பொருத்தப்பாட்டுடன் நடந்து கொள்ளவும்.
- படிக்கும் ஆற்றலை மாணவர்களிடம் வளர்த்திடவும்.
- பல்துறை அறிவு பெறவும்
- மாணவன் தன் எதிர்காலத்திற்குத் திட்டமிடும் பொழுதும்
- பள்ளிப்பாடங்களில் அவனுடைய அடைவு குறையும் பொழுதும்
- விரும்பத்தகாத நடத்தைகள் அல்லது இணக்கமற்ற பல்வேறு பிரச்சனைகளை எதிர்நோக்கும் பொழுதும்.

## தொழில் வழிகாட்டல்

| | |
|---|---|
| மையர்ஸ் | தொழில் வழிகாட்டல் என்பது மனித வளத்தை பயனுள்ள முறையில் பயன்படுத்தி அதனால் அவனுக்கு தொழிலில் வெற்றியும், திருப்தியும் ஏற்படுகிறது. சமுதாயத்திற்கும் நலன் பயக்கிறது. |
| டொனால்டு.இ.சூப்பர் | தொழில் வழிகாட்டல் என்பது ஒருவன் தன்னைப்பற்றியும், ஒரு தொழிலில் தனது பங்கு பற்றியும் அறிந்துகொள்ள உதவுவதாகும். |

- தொழிலைத் தேர்ந்தெடுப்பதில்
- தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றும் பாதுகாப்பான தொழிலுக்கான தயார்படுத்துதலில்
- வேலையில் ஒத்துப்போதல் மற்றும் வேலையில் வளர்ச்சியை ஏற்படுத்துதலில்
- பொருளாதார ரீதியாக முன்னேறவும்.

## தனிப்பட்ட வழிகாட்டல்

| | |
|---|---|
| வில்சன் | தனிப்பட்ட வழிகாட்டல் என்பது ஒருவரது உடல், உணர்வு, சமூக வளர்ச்சி, நல்லொழுக்கம் மற்றும் இணக்கம் ஆகியவற்றை மேம்படுத்த உதவுவதேயாகும் |

தொடர்புக்கு 887004 6363 904710 6661

மில் தனிப்பட்ட வழிகாட்டல், ஒருவரது புலன் உணர்வுகளுக்கும், புற வாழ்க்கைச் சூழலுக்கும் இடையே ஏற்படும் பரிமாற்றத்தில் செயல்படுவதாகும்

1960 – 61 ஆம் ஆண்டு அனைத்திந்திய கல்வி மற்றும் தொழில் வழிகாட்டல் சங்கம் இந்தியாவில் 17 பல்கலைக்கழகங்களில் மூவாயிரம் மாணவர்களை ஆய்வு செய்து பொதுவான பிரச்சனைகள் எவை எவை என கண்டறிந்தது.

**4. சமூக வழிகாட்டல்**

சமூக மதிப்புகள், வாழ்க்கைத் தத்துவங்கள் மற்றும் தனிமனிதர்களுக்கு இடையேயான தொடர்புகள் போன்ற பல்வேறு சமூக பண்புகளை மாணவர்களிடம் வளர்க்க உதவுவது சமூக வழிகாட்டல் என்று பெயர்.

- நல்ல குடிமகனாக திகழ்வதற்கும்
- சிறந்த வாழ்க்கை வாழ்வதற்கும்
- மனித வளங்களை பாதுகாத்துப் பயன்படுத்துவதற்கும்
- ஓய்வு நேரத்தைப் பயனுள்ள வகையில் சமுதாயத்திற்குப் பயன்படுத்துவதற்கும், சமூக வழிகாட்டல் தேவைப்படுகிறது

**வழிகாட்டலை வகைப்படுத்துதல்**

**பிராக்டரின் வகைப்பாடு (ஆறு)**

1. தொழில் வழிகாட்டல்
2. கல்வி வழிகாட்டல்
3. சமூக செயல்களில் வழிகாட்டல்
4. பண்புகளை உருவாக்கும் செயல்களில் வழிகாட்டல்
5. உடல் ஆரோக்கியம் மற்றும் உடற்கூறு தொடர்பான செயல்களில் வழிகாட்டல்
6. ஓய்வு நேரத்தைப் பயனள்ளதாகக் கழிக்க வழிகாட்டல்

இவற்றில் தொழில் வழிகாட்டல் மற்றும் கல்வி வழிகாட்டல் மிகவும் புகழ்பெற்றவை. ஏனைய நான்கும் சமூக நோக்கில் பயனுள்ளவை.

**ஜான் ப்ருயர்ஸ் வகைப்பாடு (பத்து)**

‘கல்வி வழிகாட்டல்’ என்ற நூலின் வழிகாட்டலை 10 வகையாக வகைப்படுத்தியுள்ளார்.

1. கல்வி வழிகாட்டல்
2. தொழில் வழிகாட்டல்
3. மத வழிகாட்டல்
4. இல்லத்திலுள்ளோரிடையே நல்லிணக்கம் ஏற்பட வழிகாட்டல்
5. குடிமைப் பயிற்சி வழிகாட்டல்

தொடர்புக்கு 887004 6363 904710 6661

6. ஓய்வு மற்றும் பொழுதுபோக்கு தொடர்பான வழிகாட்டல்
7. தனிப்பட்ட நலன் கருதி வழிகாட்டல்
8. சரியான செயல்களில் வழிகாட்டல்
9. ஒத்துழைப்பு மற்றும் எண்ணித்துணிதல் போன்றவற்றிற்கு வழிகாட்டல்
10. கலாச்சார செயல்பாடுகள் தொடர்பான வழிகாட்டல்

**ப்ருவரின் வழிகாட்டல் வகைப்பாடு (நான்கு)**

அ) கல்வி வழிகாட்டல்

ஆ) தொழில் வழிகாட்டல்

இ) தனிநபர் வழிகாட்டல்

ஈ) சமூக வழிகாட்டல்

**பேட்டர்சன்ஸ் வகைப்பாடு (ஐந்து)**

1. கல்வி வழிகாட்டல்
2. தொழில் வழிகாட்டல்
3. தனிப்பட்ட வழிகாட்டல்
4. சிக்கன வழிகாட்டல்
5. ஆரோக்கிய வழிகாட்டல்

**கூ.ஃப்.கே.ஃபாவர்ஸ் வகைப்பாடு (ஐந்து)**

1. கல்வி வழிகாட்டல்
2. தொழில் வழிகாட்டல்
3. பொழுது போக்கு வழிகாட்டல்
4. ஆரோக்கிய வழிகாட்டல்
5. குடிமை சமூக நற்பண்பு வழிகாட்டல்

**மையர்ஸ் வகைப்பாடு (எட்டு)**

1. கல்வி வழிகாட்டல்
2. தொழில் வழிகாட்டல்
3. ஆரோக்கிய வழிகாட்டல்
4. சமுதாய நற்பண்பு வழிகாட்டல்
5. குடிமை வழிகாட்டல்
6. சமுதாய சேவை வழிகாட்டல்
7. பொழுது போக்கு வழிகாட்டல்
8. தலைமைப் பண்பு வழிகாட்டல்

தொடர்புக்கு 887004 6363 904710 6661

www.Padasalai.Net

ஜெபா'ஸ் மாதா பதிப்பகம்

**அலகாபாத்திலுள்ள உளவியல் அமைப்பு (நான்கு)**

அ) கல்வி வழிகாட்டல்

ஆ) தொழில் வழிகாட்டல்

இ) தனிப்பட்ட வழிகாட்டல்

ஈ) குழு வழிகாட்டல்

- வழிகாட்டுதல் சேவை இந்தியாவில் முதன் முதலில் கொல்கத்தா பல்கலைக்கழகத்தால் துவங்கியது. 1915 ஆம் ஆண்டு முதல் உளவியல் ஆய்வகம் ஏற்படுத்தப்பட்டது. பின்னர் 1936 ஆம் ஆண்டு பயன்பாடு உளவியல் துறை தனித்துறையாக நிறுவப்பட்டது.
- 1941 ஆம் ஆண்டு கொல்கத்தாவில் பாட்லிபாய் என்பரால் தொழில் வழிகாட்டுதல் அலுவலகம் நிறுவப்பட்டது.
- 1945 ஆம் ஆண்டு இந்தியாவில் பாட்னா பல்கலைக்கழகத்தில் தொடங்கப்பட்ட வழிகாட்டல் துறை வழிகாட்டுதல் இலக்கத்திற்கு புதிய தூண்டலைக் கொடுப்பதாக அமைந்தது.
- 1947 ஆம் ஆண்டு தொழிலில் வழிகாட்டலுக்கு என்று பத்திரிகையை ஏற்படுத்தியது. பார்சி இனமக்கள் இதனால் பயன்பெற்றனர். மேலும் அலகாபாத்தில் ஓர் உளவியல் அலுவலகம் உத்திரப்பிரதேச அரசு அமைத்தது.
- 1950 ஆம் ஆண்டு மும்பை அரசு தொழில் வழிகாட்டும் அமைப்பை நிறுவியது.
- 1954 ஆம் ஆண்டு மத்தியக்கல்வி மற்றும் தொழில் வழிகாட்டுதல் அமைப்பு பதினாறு மாநிலங்களில் நிறுவப்பட்டது.
- 1962 ஆம் ஆண்டு மத்தியப் பொருளாதாரத்துறை உதவியுடன் மாநிலக்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் பதினாறு இடங்களில் வழிகாட்டுதல் சேவை விரிவாக்கம் செய்யப்பட்டது.
- இ.சி.ரோபர் தனது "பள்ளி அறிவுரை பகர்பவர்" என்ற நூலில் அறிவுரை பகர்பவரின் நன்னெறிக் கொள்கைகளைப் பற்றி கூறியுள்ளார்.
- வழிகாட்டுபவர் அத்துறையில் புலமை பெற்றவராகவும், பிறரைக் கவர்ந்திழுப்பவராகவும், பிறரது நம்பிக்கைக்கு உரியவராகவும் இருக்க வேண்டும் என ஸ்டிரேங் கூறுகின்றார்.
- இ.ஜி.நாமாராவ் என்பவர் டெல்லி மேல்நிலைப் பள்ளிகளுக்கான வழிகாட்டல் திட்டம் ஒன்றை தயாரித்தார்.
- மனநலவியல் என்ற சொற்றொடரை முதன் முதலில் பயன்படுத்தியவர் வில்லியம் கானல்.
- 1950 ஆம் ஆண்டு அரசு தொழில் வழிகாட்டும் அமைப்பு மும்பையில் அரசாங்கத்தால் தொடங்கப்பட்டது.
- மாணவர் அறிவுரை பகர்தலின் பயிற்சிகளும் பண்புகளும் என்ற நூலை எழுதியவர் ஆர்.பி.ராபின்சன்

தொடர்புக்கு 887004 6363 904710 6661

- சுமூகமான நட்புறவு வளர்வதற்கான வழிமுறைகளை தந்தவர் ராபின்சன் மற்றும் டேவிஸ்
- அறிவுரை பகர்தல் எப்போது தேவைப்படுகிறது என்ற வழிமுறைகளை குறிப்பிட்டவர் செல்வி பிராக்தன்
- அறிவுரை பகர்தல் பண்புகள் பற்றி கூறியவர் பீட்டர்சன்
- பேக்கர் மெஹ்தி இவர் தனது "Guidance in Schools 1978" என்ற நூலில் வழிகாட்டலின் இயல்பை குறிப்பிட்டுள்ளார்.

**அறிவுரை பகர்தல் (Counselling)**

- அறிவுரை பகர்தலானது அறிவுரை கூறுபவருக்கும், அறிவுரை பெறுபவருக்கும் இடையே நிகழும் நேரடி உரையாடலை குறிக்கின்றது.
- தீவிர பிரச்சனைக்கு உட்பட்டவருக்கு சிறப்பு பயிற்சி பெற்றவரால் நேருக்கு நேர், தனித்த சூழ்நிலைகளில் மேற்கொள்ளப்படும் வழிகாட்டுதலே அறிவுரை பகர்தல் எனப்படும்.
- வழிகாட்டுதலின் இதயம் என்பது அறிவுரை பகர்தல்
- அறிவுரை பகர்தலின் இதயம் என்பது நேர்காணல்

**வரையறைகள்**

| | |
|---|---|
| மையர்ஸ் | அறிவுரை பகர்பவர், அறிவுரை பெறுபவருக்கு உதவி செய்யும் வகையில் அமைந்த ஒரு தொடர்புமுறை ஆகும் என்று கூறுகிறார். |
| ஆர்பெக்கில் | அறிவுரை பகர்தல் என்பது அறிவுரை பெறுபவரை மையமாக கொண்டு செயல்பட வேண்டும். |
| ஸ்மித் | அறிவுரை பகர்தல் என்பது அறிவுரை அளிக்கப்பட வேண்டியவர். அறிவுரை பெறுபவர் விரும்பியவற்றை தேர்ந்தெடுத்தல், திட்டமிடுதல் அல்லது ஒத்துப்போகுதல் போன்றவை தொடர்பான விளக்கங்களையும் உண்மைகளையும் கண்டுகொள்ள உதவும் ஒரு செயல் ஆகும். |
| ரோஜர் (1942) | ஆலோசனை பகருபவருக்கும், ஆலோசனை பெறுபவருக்கும் இடையே நிலவும் நன்கு வடிவமைக்கப்பட்ட ஏற்றுக்கொள்ளத்தக்க உறவினைக் குறிக்கிறது. இவ்வளவு புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட சூழலில் ஆலோசனை பெறுபவரை ஆக்கப்பூர்வமாகச் செயல்பட வைக்கிறது. அந்த அளவுக்கு அவர் தன்னை புரிந்து கொள்ள வகை செய்கிறது. |
| ரோஜர் (1952) | ஆலோசனை பகருபவருக்கும், ஆலோசனை பெறுபவருக்கும் உள்ள தொடர்பு சீராக இருக்கவும், ஆலோசனை பெறுபவர் ஒரு காலத்தில் பெற முடியாத அனுபவங்களை இப்போது பெறவும் ஒருங்கிணைந்து முழு மனிதராக மாறவும் இம்முறை துணை புரிகிறது. |

| | |
|---|---|
| பெப்பின்ஸ்டை மற்றும் பெப்பின்ஸ்கை | ஆலோசனை பகருபவருக்கும், ஆலோசனை பெறுபவருக்கும் இடையே தொழில் ரீதியான சூழலில் நடைபெறும் சொல்லாடலே ஆலோசனை பகர்தல் ஆகும். இச்சொல்லாடலை தொடங்கிப் பேணுவதால் ஆலோசனை பெறுபவரின் நடத்தையில் மாற்றம் ஏற்படுகிறது. |
| மேக்லீன் (1955) | தானாகத் தீர்த்துக் கொள்ள முடியாத பிரச்சனைகளையுடைய ஒருவருக்கும் பல்வேறு பிரச்சனைகளுக்குத் தீர்வு காண மற்றவருக்கு உதவும் அனுபவமும் பயிற்சியும் பெற்ற தொழில்சார் பணியாளர் ஒருவருக்கும் இடையே நிகழும் உறவு சார்ந்த செயல்முறையே ஆலோசனை பகர்தல் எனப்படுகிறது. |
| டால்பார்ட் | அறிவுரை பகர்பவர், அறிவுரை பெறுபவர் ஆகியோரிடையே நேர்முகத் தொடர்பு ஏற்படுகிறது. இதன் மூலம் அறிவுரை பெறுபவர் தற்போதைய சூழ்நிலையையும், வினையக்கூடிய எதிர்கால சூழ்நிலையையும் உணரச்செய்து தன்னுடைய இயல்திறன்களையும், ஆற்றல்களையும் சமூகத்திற்கு பயனுள்ள வகையில் பயன்படுத்தி மன நிறைவுள்ள வாழ்க்கை வாழவும் தனது பிரச்சனைகளையும் தீர்த்துக்கொள்ள உதவும். |
| Webster Dictionary | Counselling is consultation mutual interchange of opinions deliberating together என்று வரையறுக்கப்படுகிறது. |
| புளோசர் | ஆலோசனை வழங்கல் வெவ்வேறாக வரையறுக்கப்பட்டாலும் பிரச்சனைக்கு உட்படுபவர் பிரச்சனையிலிருந்து வெளிவர அனுபவமுள்ளவரின் அறிவுரைகளையும் ஆலோசனைகளையும் பெறுதல் என்பதே அடிப்படை ஆகும். |
| ஸ்டெபிர் | கற்றல் கற்பித்தலில் ஆசிரியர் பங்கேற்புக்கு ஒப்பிடுகிறார். ஆலோசனை வழங்கல் உள்ளார்ந்த ஈடுபாட்டுடன் கூடிய உறவினைக் குறிப்பதாகும். ஒருவரையொருவர் புரிந்து கொண்டு நம்பிக்கை கொண்ட ஒருவரிடம் பெறும் கருத்துப்பரிமாற்றம் ஆலோசனைகளாகும் |

## அறிவுரை பகர்தலின் தன்மைகள் (Nature of Counselling)

- அறிவுரை பகரும் பொழுது அறிவுரை வழங்குபவர் மற்றும் அறிவுரை பெறுவோரிடையே ஓர் நேரடியான சந்திப்பு நிகழ்கின்றது
- அனுபவம், பயிற்சி, கல்வித்தகுதியின் விளைவாக அறிவுரை வழங்குபவர், அதை நாடுபவருக்கு அறிவுரைகளை வழங்குகிறார்
- அறிவுரை பகர்தலின் போது அதை வழங்குபவர் மற்றும் பெறுவோரிடையே கற்றல் நடைபெறுகிறது

தொடர்புக்கு 887004 6363 904710 6661

ஜெபா'ஸ் மாதா பதிப்பகம்

- திட்டமிடவும், திறமைகளை புரிந்துகொள்ளவும் அறிவுரை பகர்தல் துணைபுரிகின்றது
- ஒருவர் தனது பலம் மற்றும் பலவீனங்களை அறிந்து கொள்ள அறிவுரை பகர்தல் துணைபுரிகிறது

## அறிவுரை பகர்தலுக்கான தேவைகள் (Need for Counseling)

- தனது பிரச்சனைகளைப் புரிந்து கொண்டு, தீர்க்கும் வழிமுறைகளை அறிந்து கொள்ள முடிகிறது.
- தனது நிறை, குறைகளை அறிந்து கொண்டு திறமைக்கேற்ற குறிக்கோளை அடைய முடிகிறது.
- சரியாக திட்டமிட்டு, குறிக்கோளை அடைய முடிகிறது.
- தனிநபர்களுடைய குறைபாடுகள், பிரச்சனைகளைக் கண்டறியவும், அவர்களுக்கு உதவ வேண்டும், பிரச்சணைகளை தீர்க்க வேண்டும் என்ற நிலையிலும்,
- தனிநபர் தனக்கு யாராவது உதவினால் நல்லது என்ற உணர்வுடன் இருக்கும் போதும், உணர்வுகளை வெளிக்கொணரவும், தவறுகளை விரிவாக சுட்டிக்காட்டிடவும்,
- அவர்களின் தனிப்பட்ட திறன்களை உணரச்செய்யவும், உள்ளுணர்வுகளை வளரச்செய்யவும், திட்டமிட்டு செயலாற்றச் செய்யவும், அறிவுரை பகர்தல் தேவைப்படுகிறது.

### அறிவுரை பகர்தலின் பண்புகள் (Importance of Counselling)

- அறிவுரை பகர்பவனுக்கும், அறிவுரை பெறுபவருக்கும், இடையே தனித்த நேர்முகத் தொடர்பு ஏற்படுதல்.
- வளர்ச்சி சூழ்நிலையைத் தோற்றுவிக்கும் வண்ணம், அறிவுரை பெறுபவர் தன் நிறைகுறைகளை உணரச் செய்தல்.
- தன் இயல்திறன்களையும், ஆற்றல்களையும், தனக்கும் சமூகத்திலும், உகந்த வகையில் அறிவுரை பெறுபவனை பயன்படுத்தச் செய்தல்.
- இது ஒரு தொழில்முறை பணி
- அறிவுரை பகர்தலின் உடனடி நோக்கம், அறிவுரை பெறுபவர் தன்னுடைய தற்போதைய பிரச்சனையைத் தானே தீர்த்துக்கொள்ள உதவுதல், எதிர்காலத்தில் தனது பிரச்சனைகளைத் தானே தீர்த்துக் கொள்ளும் ஆற்றலை உருவாக்கிடல், அதற்கு அடுத்த நோக்கமாகும்.
- அறிவுரை பகர்தலில், அறிவுரை பெறுபவனிடம் ஆளுமை மாற்றத்தை விரும்பத்தக்க வகையில் ஏற்படுத்துகிறது. அறிவுரை பெறுபவர் தன்னைப்பற்றி முழுமையாக உணர்ந்து கொள்ள உதவி அளிக்கப்படுகிறது.
- அறிவுரை பகர்தல் என்பது அறிவுரை பெறுபவரிடம் கற்றல் செயல்பாட்டை மேம்படுத்துகிறது.

தொடர்புக்கு 887004 6363 904710 6661

- அறிவுரை பகர்தல் என்பது
  1) உபதேசம் செய்வதல்ல
  2) சமாதானப்படுத்துவதோ, வற்புறுத்துவதோ அல்ல
  3) விசாரணை செய்வதல்ல
  4) உளப்பகுப்பாய்வு முறையும் அல்ல.

**அறிவுரை பகர்வரின் பண்புகள்**

Haimin and Paulsen (1950) என்ற ஆலோசகர்கள் கருத்தின் படி,

1. இரக்கமனப்பான்மை
2. புரிந்துகொள்ளும் திறன்
3. நட்பு ரீதியான அணுகுமுறை
4. நயம்பட உரைக்கும் உணர்வு
5. நிலைத்த தன்மை
6. பொறுமை
7. நோக்க அடிப்படை
8. நேர்மை, சமநிலை, சார்பற்ற நிலை
9. சகிப்புத் தன்மை, அமைதி
10. பரந்த எண்ணம், மகிழ்ச்சியான நிலை
11. சமுதாய நுண்ணறிவு போன்றன சிறந்த தரமான ஆலோசகருக்கான பண்புகளாகக் கூறுகின்றனர்.

**ஷெர்ஷல் கூற்றுப்படி அறிவுரை பகர்பவரின் செயல்கள்**

1. உளவியல் தேர்வு வைத்தல்
2. தொழில் மற்றும் கல்வி தகவல்களைப் பரப்புவதற்கு ஒருங்கிணைத்தல்
3. நேர்முகத்தேர்வு நடத்தல்
4. கல்வி மற்றும் தொழில் வழிக்காட்டலை அளித்தல்
5. பணிக்கு ஆள் அமர்த்தும் சேவையை நடத்துதல்
6. ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல்
7. குழு வழிகாட்டல் நடத்துதல்
8. பயிற்சி
9. அனுபவத்தைப் பகிர்ந்து கொள்ளல்

நேர்காணல், தேர்வு, கதை எழுதுதல், சுயசரிதை, வாழ்க்கை வரலாறு (பெரியோர் மற்றும் சிறியோர்) போன்றவற்றில் உள்ள தகவலைச் சேகரித்து பகுத்தாய வேண்டும். இதன் மூலம் தீர்வுகள்

காண வேண்டும். குழு வழிகாட்டல், கருத்தரங்குகள் மூலமாக வழிகாட்டலை நடத்தி அறிவுரை பகர்பவர் சரியாக ஈடுபட வேண்டும். தொடர்பணி இருக்க வேண்டும்.

**நியூசம் அறிவுரை பகர்தலின் படிநிலைகள்**

நியூசம் (Newsom) அறிவுரை பகர்தலின் படிநிலைகளை வரிசைபடுத்தியுள்ளார்

- தன்னிடம் வருபவரிடம் மனநெருக்கம் ஏற்படுத்திக் கொள்வது
- உதவி அளிக்கப்படும் சூழ்நிலையை உருவாக்குதல்
- எதிர்மறை மனப்பான்மைகளையும் உள்ளக் கிடக்கைகளை வெளிப்படுத்தவும் உதவுதல்
- பிரச்சனையை தீர்க்க சாதக பாதகங்களை தெளிவுபடுத்துதல்
- தீர்வினை தேர்வு செய்ய உதவுதல்
- புதிய இலக்குகளை அமைத்தல்
- தன்னம்பிக்கை வளர்த்தல் முடிவுகளை எடுக்கும் ஆற்றலைப் பெறுதல்
- பின் தொடர்பணி
- அறிவுரை பகர்தலை நிறுத்துவது.

**அறிவுரை பகர்தலின் வகைகள் : ( Type of counselling )**

1. நெறிப்படுத்தும் அறிவுரை பகர்தல் (Directive Counselling)
2. தன்னெறிப்படுத்தும் அறிவுரை பகர்தல் (Non – Directive Counselling)
3. பொதுநிலை அறிவு பகர்தல் (Eclectic Counselling)

1. **நெறிப்படுத்தும் அறிவுரை பகர்தல்**

- நேரடி அறிவுரை பகர்தல் என்றும் அழைக்கப்படுகிறது
- நெறிப்படுத்தும் அறிவுரை பகர்தல் அறிவுரை பகர்பவரை மையமாகக் கொண்ட அறிவுரை பகர்தல் ஆகும்.
- இம்முறையை இ.ஜி.வில்லியம்சன் தோற்றுவித்தார்.
- ஆர்பெக்கில் என்பவரின் கூற்றுப்படி நெறிப்படுத்தும் அறிவுரை பகர்தல் என்பது எவ்வாறு பிரச்சனைகளை தீர்ப்பது என்று அறிவுரை பெறுபவர் கற்றுக்கொள்ள உதவுவது ஆகும்.

**நெறிப்படுத்தும் அறிவுரை பகர்தலின் படிகள்:**

இ.ஜி.வில்லியம்சனின் ஆறுபடிகள்

1. பகுத்தறிதல்



http://www.trbtnpsc.com/2013/08/tet-study-materials-latest-schedules.html

2. தொகுத்தறிதல்

3. குறையறிதல்

4. வருவதுரைத்தல்

5. அறிவுரை பகர்தல்

6. தொடர்செயல்

**குறைகள்**

- சர்வாதிகார முறை
- அறிவுரை பெறுபவர் தன்னிச்சையாக செயல்பட இயலாது
- அறிவுரை பெறுபவரிடம் புதிய கற்றல் ஏதும் ஏற்பட்டு வளர்ச்சிக் கூறுகள் தோன்றிட வாய்ப்பில்லை.
- இளம் சிறார்களுக்குமே, தீவிர நடத்தைக் கோளாறு ஏற்பட்டு உள்ளவர்களுக்கு மட்டும் அதிகம்.

**2. தன்னெறிப்படுத்தும் அறிவுரை பகர்தல்**

- அறிவுரை பெறுபவரை மையமாகக் கொண்ட முறையாகும்.
- கார்ல்.ஆர்.ரோஜர்ஸ் இம்முறையை தோற்றுவித்தார்.
- அறிவுரை பெறுபவர் தன்னைப்பற்றி நன்கு புரிந்துகொள்ள அறிவுரை பகர்பவரை அனுமதிக்க வேண்டும்.
- இத்தகைய அறிவுரை பகர்தலை வளர்ச்சிசார் செயல்கள் என அழைக்கிறோம்.
- இம்முறை அறிவுரை பெறுபவரை மையமாகக் கொண்டு செயல்படக்கூடியது.
- இம்முறை மறைமுக அறிவுரை பகர்தல் என்றும், நெறிசாரா அறிவுரை பகர்தல் என்றும் அழைக்கப்படுகிறது.

**குறைகள்**

- கால விரயம்.
- இளம் சிறார், தவிர நடத்தைக் கோளாறு உடையவர்கள், நுண்ணறிவுக் கோளாறு உள்ளவர்களுக்கு ஏற்றது அல்ல
- அறிவுரை அளிப்பவரின் குறைவான பங்கீடு அறிவுரை பெறுபவரிடம் மனச்சலிப்பை உண்டாகிறது.

**3. பொதுநிலை அறிவுரை பகர்தல்**

- சமரச முறை என அழைக்கப்படுகிறது.
- இம்முறையுடன் தொடர்புடையவர் எ·.ப்.சி. தார்ன்

- நெறிப்படுத்தப்பட்ட முறையில் செயல்படுவதைப் போல், அறிவுரை பகர்பவர் ஆதிக்கம் செலுத்துவதில்லை. அதே சமயத்தில் நெறிசாரா முறையில் அதிகம் செயல்படாமலிருந்து ஊக்குவித்தலை மட்டும் மேற்கொண்டிருந்த செயல்பாட்டையும் முழுமையாகப் பின்பற்றுவதில்லை இவ்விரண்டு முறைக்கும் இடைப்பட்ட முறை தான் சமரசமுறை.
- சாத்வீக முறை இம்முறையில் பயன்படுத்தகிறது.

### குழு மற்றும் தனி நபர் அறிவுரை பகர்தல் (Group and Individual)

**1. தனிநபர் அறிவுரை பகர்தல்**

- அறிவுரை கேட்க வரும் தனிப்பட்ட நபருக்கு தனியொரு வல்லுநர் (அறிவுரை அளிப்பவர்) அறிவுரை பகர்வது தனிநபர் அறிவுரை பகர்தலாகும்.
- நேர்காணல் யுத்தியைக் கொண்டு அறிவுரை பகர்தல் நடைபெறுகிறது.
- தனிநபர் அறிவுரை பகர்தலில் அறிவுரை அளிப்பவருக்கும், அறிவுரை பெறுபவருக்கும் இடையே நிகழும் நேரடி உறவு முறையாகும்.
- தங்களது பிரச்சனைகளை மையமாகக் கொண்டு இருவருக்கும் இடையே இடைவினை மாற்றம் நிகழும்.
- பிரச்சனைக்குரிய காரணங்களைக் கண்டறிந்து அவற்றிற்குரிய தீர்வினை கண்டறிய முயல்வர். அறிவுரை பகர்தலில் பெரும்பாலும் தனி நபர் அறிவுரை பகர்தலே நடைபெறும்.
- தனிநபர் அறிவுரை பகர்தலானது கல்வி, தொழில் சம்பந்தமான, மனவெழுச்சி அல்லது தனது சொந்தப் பிரச்சனைகளுக்குத் தீர்வுகாண அளிக்கப்படுகிறது.
- அறிவுரை பகர்வர், அறிவுரை பெறுபவரின் பிரச்சனைகளைக் கண்டறிந்து, போதுமான விவரங்களை அறிவுரை பெறுபவரிடமிருந்து கேட்டறிந்து, பிரச்சனையை அறிவியல் முறைப்படி அணுக விழைவார்.
- அறிவுரை பெறுபவரின் திறமைகள், தன்னம்பிக்கை, விடா முயற்சியை மனதில் கொண்டு அவரின் பிரச்சனைகளுக்கு சரியான முறையில் தீர்வு காண இது பயன்படுகிறது.
- அறிவுரை பகர்பவர், அறிவுரை பெறுபவரை உற்றுநோக்கி எவ்வாறு தனது பிரச்சனையைப் புரிந்து கொள்கின்றனர். எவ்வாறு தீர்வு காண விழைகின்றனர், எவ்வாறு பகுத்தாரய்கின்றனர் எனவும் தேவைப்படின் கேள்விகள் கேட்டும், போதுமான செய்திகளை வழங்கியும் பிரச்சனைக்கு தீர்வு காண உதவி செய்கின்றனர்.
- தனி நபர் அறிவுரை பகர்தலானது பிரச்சனைகளின் தன்மையை பொறுத்து எளிதாகவோ அல்லது கடினமானதாகவோ இருக்கலாம்.
- பிரச்சனைக்கு ஏற்றப்படி தீர்வு காண அறிவுரை பகர, அறிவுரை பகர்பவர் திறன்மிக்கவராக மனித உளவியலை பற்றிய அறிவு உடையவராக இருத்தல் வேண்டும்.



http://www.trbtnpsc.com/2013/08/tet-study-materials-latest-schedules.html

**2. குழு அறிவுரை பகர்தல்**

- நான்கு முதல் ஆறு பேர் கொண்ட சிறு குழுவினர் தங்களது பொதுப்பிரச்சனைகளை பற்றி விவாதித்து ஆற்றுப்படுத்திக்கொள்ளும் செயல்பாடுகள் குழுவாக அறிவுரை பகர்தல் எனப்படும்.
- குழு அறிவுரை பகர்தல் மாணவர்களுக்கு புதிய வழிமுறையாகும்.
- சில சமயங்களில் தனிநபர் வழிகாட்டுதலில் சரியாக பதில் அளிக்காத மாணவர்களிடையே குழு அறிவுரை பகர்தலில் நடைபெறும் கலந்துரையாடல் மற்றும் பிற மாணவர்கள் தங்கள் பிரச்சனைகளை விவாதிக்கும் போது தங்கள் சொந்த பிரச்சனைகளைத் தாங்களாகவே புரிந்து கொள்ளவும் துணை செய்கிறது.
- முன்னர் ஏற்றுக்கொள்ள முடியாது என கண்டறிந்த கருத்துக்களை மற்றும் மதிப்புகளை மேலும் புரிந்து கொள்ளத்தக்கதாகவும், ஏற்றுக்கொள்ளத்தக்கதாகவும் குழு அறிவுரை பகர்தல் மாற்றுகிறது.
- குழு அறிவுரை பகர்தல் மாணவர்களின் கனவு, ஆசை, இலட்சியம் மற்றும் ஆற்றல் ஆகியவற்றை சமூகமாக மாற்றும் ஏற்றுக்கொள்ளக் கூடிய சமூக சூழ்நிலையில் பிறருக்கு உதவும் வகையில் மாற்றிக் கொள்ள ஊக்குவிக்கிறது.

**குழு அறிவுரை பகர்தலுக்கான தேவைகள்**

1. தனி நபர் பேட்டி
2. குழு வழிகாட்டல் அறையின் உட்புற தேவைக்கான ஏற்பாடுகள்
3. ஒத்த இயல்பு கொண்ட குழு
4. குழுவில் இடம் பெறும் மாணவர்களின் எண்ணிக்கை

- நடமாடும் அறிவுரை பகர்தல் மையம் சென்னை, கோவை, வேலூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, திருச்சி, மதுரை, நெல்லை, சேலம் ஆகிய 10 மாவட்டங்களில் 2.01 கோடி ரூபாய் செலவில் அமையப்பட்டுள்ளது.

**கல்வி மற்றும் தொழில் வழிகாட்டலில் நாட்டச்சோதனையின் முக்கியத்துவம்**

**(Importance of Aptitude test in Academic and Vocational guidance)**

- நாட்டச்சோதனைகள் பணியாளர்களை ஒரு குறிப்பிட்ட வேலைக்கு தேர்ந்தெடுக்க உதவுகின்றன.
- நாட்டச்சோதனைகள் ஒருவருக்கு தொழிலைத் தேர்ந்தெடுக்க உதவுகிறது.
- பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் மாணவர்களின் தேர்ச்சி சதவீதத்தை அதிகரிப்பதற்கு பொருத்தமான நாட்டச் சோதனைகளின் உதவியை நிர்வாகிகள் நாடலாம்.
- உண்மையில் நாட்டச்சோதனைகள் எதிர்கால வெற்றியை நிர்ணயிப்பதைவிட நிகழ்கால அடைவுகளை மட்டுமே அளவிடுகின்றன.

தொடர்புக்கு 887004 6363 904710 6661

www.Padasalai.Net

- ஒருவரின் தொழிலில் ஏற்படும் வளர்ச்சிக்குப் பெரிதும் காரணமாக விளங்குவது நாட்டத்திறன்கள் மட்டுமே. நுண்ணறிவு போன்ற காரணங்கள் இருந்தாலும் நாட்டத்திறன்களே முதன்மையானவை.
- மாணவர்களின் திறமைகள், திறன்கள் அடிப்படையில் கற்றல்சார் துணை செயல்பாடுகளை தேர்ந்தெடுக்க உதவுகிறது.
- கல்விக்கும், வேலைவாய்ப்பிற்கும் உள்ள முரண்பாட்டை குறைக்க உதவுகிறது.
- குறிப்பிட்ட உயர்கல்வியை தேர்ந்தெடுக்கவும், குறிப்பிட்ட தொழில் (அ) தொழிற்பயிற்சியை தேர்ந்தெடுக்க, ஆராய்ச்சி செய்ய நாட்டச்சோதனை பயன்படுகிறது.

**தொழில் தேர்வு கோட்பாடுகள்**

1. கின்ஸ்பர்க்கின் தொழில் தெரிவுக்கொள்கை
2. சூப்பரின் தொழில் தெரிவுக்கொள்கை
3. ஹாலண்தின் தொழில் தெரிவு உளவியல் கொள்கை
4. ஹவிஹர்ஸ்ட்டின் தொழில் தெரிவுக்கொள்கை
5. அமைப்புக் கொள்கை

**கல்வி நிலையங்களில் அறிவுரை தேவைப்படும் மாணவர்களை கண்டறிதல்**

**(Identification of Children with Counselling needs in Schools)**

வழிகாட்டுதல் என்பது அனைவருக்கும் எல்லா வளர்ச்சி நிலைகளில் ஏதோ ஒரு நிலையில் தேவைப்படுகிறது. நமக்கு பிரச்சனை எழும்போது நம்மால் தீர்க்க இயலாமல் பிறரின் உதவியையும், வழிகாட்டுதலையும் நாடுகிறோம். ஆனால் தீவிர மனவெழுச்சி மற்றும் நடத்தை பிரச்சனை உடையோருக்கு அறிவுரை பகர்தல் சிறந்த பலனை அளிக்கும். இதில் பயிற்சி பெற்றவர், பிரச்சனை உடையவருடன் நேரடி தொடர்பு கொண்டு ஆலோசனை வழங்குவார்.

கல்வி நிலையங்களில் அறிவுரைத் தேவைப்படும் மாணவர்களை இரு வகையாக பிரிக்கலாம்.

**1. நடத்தை பிரச்சனையுடையோர்**

- தொடர்ந்து வகுப்புக்கு செல்லாமை, பிற குழந்தைகளை துன்புறுத்துதல், திருடுதல், பொய் கூறுதல், பிறர் உடைமைக்கு தீங்கு விளைவித்தல், எதிர் பால் இனத்தவரிடம் ஒழுக்கமின்றி நடந்துகொள்ளுதல், ஆசிரியர் அளித்திடும் வீட்டுப் பாடத்தைச் சரிவர செய்யாமல் இருத்தல், தொடர்ந்து வகுப்புக்கு காலம்தாழ்த்தி வருதல், பெற்றோருக்கும், ஆசிரியருக்கும் கீழ்படியாமல்



www.Padasalai.Net

இருத்தல், உடல்நலம் குன்றியோர் போல் பாவனைச் செய்தல் போன்ற ஒழுங்கு நடத்தை பிரச்சனையுடையோரையும்.

- பிற மாணவர்களுடன் கூடி பழகாமல் கூச்சமும், நாணமும் கொண்டு எப்பொழுதும் தனித்திருத்தல், கூச்சலிட்டு அழுது ஆர்ப்பாட்டம் செய்து கடும் சினத்தை வெளிப்படுத்துதல் போன்ற ஆளுமை பிரச்சனை உடையோரை கண்டறிந்து பயிற்சி பெற்ற மனநல வல்லுனருடன் ஆலோசித்து வழிகாட்ட வேண்டும். திறமையான ஆசிரியர் தொடர் உற்றுநோக்கல் மூலம் இவ்வகை மாணவர்களை எளிதில் கண்டறியலாம்.

**2. கல்விப் பிரச்சனையுடையோர்**

பொதுவாக கற்போர், கல்வியில் பின்தங்கியோர், கல்வி அடைவில் திடீரென குறைவோர், திறமைக்கேற்ற சாதனை அடையாத குழந்தைகள், கல்வி நிறுவனத்துடன் ஒன்றி போகாதோர், திடீரென படிப்பை விட்டு விலக நினைப்போர், கற்றல் குறைபாடு உடைய குழந்தைகளை கண்டறிந்து அறிவுரை பகர்தல் வேண்டும். மேலும் அவர்களுக்கு தேவையான கல்வி செயல்பாடுகளை வழங்கிட வேண்டும்.

**கற்றல் குறைபாடு உடைய மெல்ல கற்கும் மாணவர்களுக்கு வழிகாட்டல்**

**(Guidance for Learning Difficulties or Slow Learners)**

கற்றல் குறைபாடுடைய மாணவர்களை மெல்ல கற்போர் (Slow Leaners) என்பர். பள்ளிப் பாடங்களை மோசமாகக் கற்பதற்குக் காரணம் ஒருவரிடம் காணப்படும் கற்றல் குறைபாடு ஆகும்.

**மெல்ல கற்போர் – விளக்கம்**

- ஒத்த வயதினர் செய்கின்ற கற்றல் செயல்களை செய்வதில் தோல்வியோ, தாமதமோ மிகவும் சிரமமோ படுவதற்கு கற்றல் குறைபாடு (Learning Disability) என்று பெயர். ஒரு கருத்தைப் புரிந்துகொள்ள சமவயதினரை விட அதிக நேரம் எடுத்துக்கொள்பவர்கள் மெல்ல கற்போர் எனப்படுகின்றனர். கற்றல் குறைபாடுடைய மாணவர்களுக்கு ஒத்த வயதினரைவிட மொழிவளர்ச்சி குறைவு. இவர்கள் முறையாகச் சிந்தித்தல், கேட்கும்திறன், பேசும்திறன், எழுதுதல், கணக்குப்போடுதல் ஆகியவற்றில் ஒத்த வயதினரை விடக் குறைவாகச் செயல்படுகின்றனர்.
- மொழியைப் பயன்படுத்திப் பேசுதல், எழுதுதல், புரிந்துகொள்ளுதல் ஆகிய மூன்றும் அல்லது அதற்கு மேற்பட்ட உளநிலைச் செயல்களில் ஒத்த வயதினரைவிடக் குறைவாக உள்ளவர்களை கற்றல் குறைபாடு உடையவர்கள் ஆவர். எனவே கற்றல் குறைபாடு தோன்றுவதற்கு அடிப்படையாக விளங்குவது ஒத்த வயதினரைவிட ஒருவரிடம் காணப்படும் குறைவான திறனே ஆகும்.
- இத்தகைய கற்றல் குறைபாடு உடையவர்கள் மெல்லக் கற்போர் (Slow Leaners) எனப்படுகின்றனர். இவர்கள் பள்ளிப் பாடங்களை மிகவும் மெதுவாக பயிலுகின்றனர்.
- பார்வைக் குறைபாடு, செவிக்குறைபாடு, உடல் இயக்கக் குறைபாடு, மனவளர்ச்சி குன்றுதல், மனவெழுச்சிக் குறைபாடு மற்றும் மோசமான சுற்றுச் சூழல் ஆகியவற்றால் ஒரு குழந்தை



http://www.trbtnpsc.com/2013/08/tet-study-materials-latest-schedules.html

ஜெபா'ஸ் மாதா பதிப்பகம்

பள்ளிப்பாடங்களை ஒத்தவயதினர் போல வேமாக செய்ய இயலாத தன்மை கற்றல் குறைபாடு ஆகாது.

**மெல்ல கற்போருக்கான கற்பித்தல் முறைகள்:**

டான்ஸ்லே, கில்பர்ட் (Tansley and Guilford) ஆகியோர் மெல்லக் கற்போரின் பண்புகளுக்குத் தகுந்தாற்போல் மூன்றுவிதமான கல்வி முறைகளை விளக்கியுள்ளனர். அவை,

**1. வளர்ச்சி சார்ந்த கல்வி (Adaptive and Developmental Education)**

இக்கல்விமுறை குழந்தைகளின் "அறிதன்மை வளர்ச்சிக்கு" ஏற்றாற்போல் வழங்கப்படுகிறது. மெல்லக் கற்போரின் தேவைகளுக்குப் பொருந்தும் வகையில் பாடப்பொருளை அமைத்துத் தருதல் வேண்டும். அத்துடன் அவர்களின் அறிவு வளர்ச்சிகேற்றாற்போல் சிறிது சிறிதாக உயர்பாடப் பொருட்களைக் கற்பித்தல் வேண்டும். இத்தகைய கல்விமுறையின் சிறப்பு நோக்கங்களாவன..

- மெல்லக்கற்போரின் கற்றலில் உள்ள கடினச் செயல்களை நீக்குதல்.
- கல்வியில் மெல்லக்கற்போருக்கு விழிப்புணர்வை உருவாக்குதல்.
- மெல்லக்கற்போருக்கு கல்வியில் நல்லதொரு உந்துதலை உருவாக்குதல்.
- கல்வியில் மெல்லக்கற்போருக்கு நிரந்தரமான விருப்பத்தை ஏற்படுத்துதல்.
- அவ்விருப்பத்தை நிலைநிறுத்துதல்
- அவர்களின் நினைவாற்றலை அதிகரித்தல்.

**2. அடிப்படை அறிவு அளிக்கும் கல்வி (Corrective Education)**

இக்கற்பித்தல் முறை மொழி, கணிதம் போன்ற குறிப்பிட்ட பாடத்தில் புதிய அடிப்படை அறிவு இல்லாதவர்களுக்கு அளிக்கப்படுகிறது. இக்கல்வி சூழ்நிலையின் விளைவாக மெல்லக்கற்போருக்கு அளிக்கப்படுகிறது. சிறுவயதில் பெற்றோர்களின் குறைவான ஊக்குவித்தல், குறைவான மொழிப்பயிற்சி, பள்ளிக்கு அனுப்பாமலிருத்தல், அடிக்கடி குடும்பம் இடமாற்றம் காரணமாகப் பள்ளி மாற்றம், ஆசிரியர் மாற்றம், பாடநூல்கள் இல்லாமல் கற்றல், ஆசிரியர் கற்பிக்கும் முறையில் மாற்றம் போன்ற பல காரணங்களால் மாணவர்கள் மெல்லக்கற்கின்றனர். சரியான முறையில் இக்குறைபாடுகளை நீக்கி மெல்லக்கற்போரை முன்னேற்ற அடிப்படை அறிவு அளிக்கும் கல்வி முறை பெரிதும் உதவுகிறது.

**3. குறைதீர் கல்விமுறை (Remedial Education)**

இக்கற்பித்தல் முறை புலனுணர்ச்சி (Sensory) புலனறிவு (Perception), உடலியக்கம் (Motor) ஆகியவற்றின் ஒத்துழைப்புக் குறைவால், மெல்லக்கற்போரிடம் ஏற்படும் குறைபாடுகளை நீக்கவும் அல்லது குறைக்கவும் பயன்படுகிறது. குழந்தைகள் புறச்சூழலிலுள்ள பொருள்களை உணர்ந்துகொள்வதில் சிரமப்படுகின்றனர். இவர்களிடம் கையும், கண்ணும் ஒருங்கிணைந்து செயல்படுவதில்லை. விழிகளை நகர்த்தி வாசிப்பதில் சிரமப்படுகின்றனர். இவர்களிடம் குறைவான ஞாபகசக்தி உள்ளது. தாம் கற்றவற்றை நீண்ட நேரம் இவர்களால் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள

தொடர்புக்கு 887004 6363 904710 6661

முடிவதில்லை. இத்தகைய கற்போரிடம் புலனுணர்வு, புலனறிவுக் குறைபாடுகள் திருத்தி அமைக்கப்படுகின்றன. இது குறைதீர் கல்விமுறை எனப்படும்.

**ஆசிரியரும் மெல்லக்கற்போரும்**

ஆசிரியர் மெல்லக்கற்போரை ஊக்குவிக்கவும் முன்னேற்றவும் பயன்படுத்தக்கூடிய சில வழிமுறைகள்.

**1. அறிவாண்மையை அளத்தல்**

ஆசிரியர் முதலில் மெல்லக் கற்பவர்களின் அறிவாண்மையைக் காணவேண்டும். மெல்லக்கற்போர் குறைவாகக் கற்பதற்கு அவர்களின் குறைவான அறிவாண்மை காரணமாக இருக்கலாம்.

**2. கற்பித்தல் முறை**

ஆசிரியர் கற்பிக்கும் போது மெல்லக்கற்போர் எளிதில் புரிந்துகொள்ளக்கூடிய கற்றல் உபகரணங்களையே பயன்படுத்துதல் வேண்டும். கல்விச்சுற்றுலா, திரைப்படங்கள், செயல்விளக்கச் சோதனைகள் போன்றவற்றை ஆசிரியர் அடிக்கடி அளித்தல் வேண்டும். பொருத்தமான உதாரணங்களைக்கொண்டு பாடப்பகுதிகளை ஆசிரியர் நடத்துதல் வேண்டும்.

**3. சிறிய அளவில் கற்பித்தல்**

பெரிய பாடத்தினைச் சிறுசிறு பகுதிகளாக்கி விளக்கம் தருதல் வேண்டும். விளக்கங்கள் சிறிய அளவினதாயின் கற்றல் சுலபமாக இருக்கும்.

**4. விளக்குதல்**

மெல்லக் கற்போருக்குப் பாடங்களைச் சரியாகவும் சந்தேகம் இன்றி விவரித்த பின்னரே, அப்பாடத்தில் பயிற்சிகளைக் கொடுத்தல் வேண்டும்.

**5. பயிற்சி தருதல்**

பயிற்சிகளை அளிக்கும் போது அவை பெருஞ்சுமையாக மாணவருக்கு இருத்தல் கூடாது. மெல்லக்கற்கும் மாணவரின் திறனுக்கு ஏற்றாற்போல் சிறுசிறு பயிற்சிகளாகக் கொடுத்து, அவர்களின் வெற்றிக்கு வழிவகுக்க வேண்டும். சிறுசிறு வெற்றியே அவர்களின் பெரிய முயற்சிக்கு வழிவகுக்கும்.

**6. ஆசிரியர் மாணவர் உறவு**

ஆசிரியர் பாடம் நடத்தும் போது எளிய சொற்களையே பயன்படுத்தி, பாடநூலில் உள்ள கருத்துக்களை விளக்குதல் வேண்டும். ஆசிரியர் மாணவர் உறவுகளில் நெருக்கம் வேண்டும்.

**7. சந்தேகங்களைப் போக்குதல்**



www.Padasalai.Net

மெல்லக்கற்போருக்கு ஏற்படும் சந்தேகங்கள் அன்றைய பாடத்துடன் தொடர்பில்லாது இருப்பினும் ஆசிரியர் அவற்றைப் பற்றி எடுத்துக்காட்டுகளுடன் விளக்கம் தருதல் வேண்டும்.

**8. நம்பிக்கையூட்டுதல்**

ஆசிரியர் மெல்லக்கற்போரிடம் "உங்களால் பாடங்களை நன்கு கற்க முடியும்" என்று அடிக்கடி கூறி நம்பிக்கையூட்டுதல் வேண்டும்.

**9. கற்கும் வாய்ப்புகள் அளித்தல்**

ஆசிரியர் மெல்லக்கற்போருக்கு பலவகையான கற்றல் வாய்ப்புகள் அளித்து அவர்களின் கற்றல் முன்னேற்றத்திற்கு வழிவகுக்க வேண்டும்.

**10. தனியாள் அணுகுமுறை**

ஆசிரியர் தனித்தனியாகவோ அல்லது குழுவாகவோ மெல்லக் கற்கும் மாணவரை அணுகி அவர்களின் குறைகளை நீக்குதல் வேண்டும். ஏனெனில் வகுப்பில் இருக்கும் போது பயம், கூச்சம் காரணமாக மெல்லக்கற்போர் தமது சந்தேகங்களை வகுப்பில் வெளிப்படுத்தாமல் போகலாம். எனவே தனியாள் அணுகுமுறை மெல்லக்கற்போருக்கு தேவைப்படுகிறது.

## குறைநிலை சாதனையாளர்களுக்கு வழிகாட்டல் (Guidance for Under Achievers)

**குறைநிலை சாதனையாளர்கள் - விளக்கம்**

அறிவாண்மைச் சோதனையில் அதிகமான அறிவாண்மை ஈவு (நுண்ணறிவு ஈவு) பெறும் மாணவர்கள் பொதுவாகப் படிப்பிலும் உயர்மதிப்பெண் எடுப்பர். அதேபோல, குறைவான அறிவாண்மை ஈவு பெறும் மாணவர்கள் பொதுவாகக் குறைந்த மதிப்பெண்ணே எடுப்பர். அறிவாண்மை ஈவு அதிகமிருந்து அதிக மதிப்பெண் பெறுபவர்கள் "உயரளவுச் சாதனையாளர்கள்" (Achievers) எனப்படுவர். ஆனால், சில நேரங்களில் அறிவாண்மைச் சோதனையில் அதிகமான அறிவாண்மை ஈவு பெற்ற மாணவர்கள், தங்களின் அறிவாண்மை ஈவுக்கு ஏற்றாற்போலின்றி, மிகவும் குறைவான மதிப்பெண்களைப் (Poor Marks) பெற்றிடுவர். இவர்கள் குறைநிலைச் சாதனையாளர்கள் (Under-Achievers) எனப்படுவர். இவர்களே வகுப்பில் ஆசிரியருக்கு மிகுந்த சவாலாக இருப்பர்.

**குறைநிலைச் சாதனையாளரின் பண்புகள்**

லிண்ட்கெரன் (Lindgren) கருத்துப்படி குறைநிலைச் சாதனையாளர்களிடமுள்ள பண்புகள்.

- அதிகாரத்திலுள்ளவர்கள் (ஆசிரியர், பெற்றோர்) மீது வெறுப்பும் ஆத்திரமும் காட்டுதல்.
- ஒத்துழைப்பின்மையை வெளிப்படுத்துதல்
- கூச்சம், வெட்கம் காரணமாக ஒதுங்கியிருத்தல்
- வகுப்பில் பாடத்தில் கவனம் செலுத்தாமல் வேறொரு செயலில் ஈடுபடுதல்
- ஆசிரியர் குறிப்பிடும் சமூக எதிர்பார்ப்புகளுக்கு இசைந்து போகாமலிருத்தல்.



http://www.trbtnpsc.com/2013/08/tet-study-materials-latest-schedules.html

**குறைநிலைச் சாதனையாளர்களுக்குக் கற்பித்தல்**

1. ஆசிரியர் அன்பும் பரிவும் காட்டி வகுப்பில் இதமான சூழலை ஏற்படுத்துதல் வேண்டும்.
2. குறைநிலைச் சாதனையாளர்களின் நட்பு வட்டத்தை பெரிதுப்படுத்துமாறு ஆசிரியர் அறிவுரை கூறுதல் வேண்டும்.
3. கூச்சம், அச்சம் காரணமாக ஒதுங்கும் மாணவர்களுக்குச் சிறுசிறு பொறுப்புகளை அளித்து அவற்றிலிருந்து வெளிவர செய்ய வேண்டும்.
4. பாடத்தோடு நில்லாமல் தங்களுக்குப் பிடித்த செயல்களில் ஈடுபடுமாறு மாணவர்களை ஆசிரியர் தூண்டுதல் வேண்டும்.
5. ஆர்வத்தை தூண்டும் வகையில் பாடம் கற்பித்தலை ஆசிரியர் அமைத்தல் வேண்டும்.
6. தண்டனையால் திருத்துவதைவிட வெகுமதி, பரிசுகள் தந்து இத்தகைய மாணவர்களைத் திருத்துதல் வேண்டும்.

## மீத்திறன்மிக்க / திறனாண்மைக் குழந்தைகளுக்கு வழிகாட்டுதல் (Guidance for Gifted)

**திறனாண்மைக் குழந்தைகள் – விளக்கம்**

- உயர்சாதனை செய்வதற்குரிய உள்ளாற்றலுடைய குழந்தைகளும், உயர்சாதனையை ஏற்கனவே வெளிப்படுத்தியவர்களும் "திறனாண்மைக் குழந்தைகள்" (Gifted Children) எனப்படுவர்.
- அமெரிக்க நாட்டைச் சேர்ந்த மேலாந்து (Marland) திறனாண்மைக் குழந்தைகள் கீழேயுள்ள ஐந்து களங்களுள் ஒன்றிலோ அதற்கு மேற்பட்டவற்றிலோ உயர்சாதனைகளை வெளிப்படுத்துவர் எனக் குறிப்பிட்டுள்ளார். அவை,

    1. பொது அறிவாண்மைத்திறன் (General Mental Ability)
    2. குறிப்பிட்ட பாடத்தில் நாட்டம் (Specific Academic Aptitude)
    3. ஆக்கச்சிந்தனை (Creative or Productive Thinking)
    4. தலைமைத்திறன் (Leadership Ability)
    5. கலைத்திறன் (Visual or Performing Arts)

- விப்பிள் (Whipple) என்பவரே "Gifted" என்ற சொல்லை முதன்முதலில் பயன்படுத்தியவர். இவரின் கருத்துப்படி திறனாண்மைக் குழந்தைகள் உயர்திறனை உடைய குழந்தைகள் (Children with Supernormal Ability) என்கிறார்.
- ரென்சுலி (Renzuli) கருத்துப்படி ஒருவரின் திறனாண்மையில் (Giftedness) மூன்று உயர்திறன்கள் இருப்பதாகக் கூறுகிறார். அவை,

    1. உயர் அறிவாண்மை (High General Mental Ability)
    2. உயர் செயலூக்கம் (High Task Commitment)

தொடர்புக்கு 887004 6363 904710 6661

http://www.trbtnpsc.com/2013/08/tet-study-materials-latest-schedules.html

3. உயர் ஆக்குமை (High Creativity)

திறனாண்மையுள்ளவர்கள் இம்மூன்று திறன்களையும் கையாண்டு தனக்கும், தன் சமுதாயத்திற்கும் மிகவும் பயனுள்ள செய்கைகளைச் செய்திடுவர்.

**திறனாண்மைக் குழந்தைகளைக் கண்டறிதல்**

திறனாண்மைக் குழந்தைகளை எட்டு வழிகளில் கண்டறியலாம். அவை,

1. நுண்ணறிவு சோதனைகள்
2. பள்ளிப் பாடத்தேர்வுகள்
3. ஆக்கத்திறன் சோதனைகள்
4. ஆசிரியர் கருத்துகள்
5. நண்பர்களின் கருத்துக்கள்
6. பெற்றோரின் கருத்துக்கள்
7. புதுமைப் படைப்புகள்
8. துறையறிஞர்களின் தீர்ப்புகள்

திறனாண்மைக் குழந்தைகளைக் கண்டறிய பள்ளி ஆசிரியர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளை இணைத்துப் பார்த்து கண்டறிய வேண்டும்.

**திறனாண்மைக் குழந்தைக்குரிய கல்விச் செயல்கள்**

திறனாண்மைக் குழந்தைகள் சராசரி மாணவர்களைவிட உயர் அறிவாண்மை பெற்றிருப்பர். இவர்கள் அரிய இயற்கை வளங்களுக்கு இணையாக நாட்டின் சொத்தாக மதிக்கப்படுகின்றனர். சாதாரண மாணவர்களுக்கு வழங்கப்படும் கல்விச் செயல்கள் இவர்களுக்குப் பலனளிப்பதில்லை.

திறனாண்மைக் குழந்தைகளின் உள்ளார்ந்த உயர்திறன்களை வெளிப்படுத்துவதற்கும், வளர்ப்பதற்கும் மூன்று கல்வித் திட்டங்கள் உள்ளன. அவை,

**1. வளமைக் கல்வித்திட்டம்**

- வழக்கமான பள்ளி வகுப்புகளிலேயே திறனாண்மை மாணவர்களின் அறிவாற்றலை வளமைப்படுத்தும் வகையில் அதிகப்படியான கற்கும் வாய்ப்புகளும் வசதிகளும் செய்து தருதல் வளமைக் கல்வித் திட்டம் (Enrichment Programme) எனப்படும்.
- திறனாண்மை மாணவர்களுக்குச் சராசரி மாணவர்களைவிடச் சற்றுக் கூடுதலான கற்றல் அனுபவங்கள் தரப்படுதல் வேண்டும். உயர்வகுப்புப் பாடநூல்களைப் படிக்கத் தருதல், உயர் கருத்துக்களைக் கற்பித்தல், கருத்தரங்கு வைத்தல், சுதந்திரமான தாமே கற்றலுக்கு வகை





www.Padasalai.Net

செய்தல் தாமே சில செயல்திட்டங்களை செய்தல் போன்ற கல்விச் செயல்கள் வளமைக் கல்வித் திட்டத்தில் இடம்பெறும்.

- மேலும் திறனாண்மைக் குழந்தைகளின் தன்மை, தேவைகளுக்கு ஏற்றாற்போல் ஆழமான கற்றல் அனுபவங்களையும் பாடப்பொருள்களையும் அமைத்துத் தருதலும் வளமைக் கல்வித் திட்டத்தில் அடங்கும்.

**2. விரைவுக் கல்வித்திட்டம்**

- ஒரு வகுப்புப் பாடத்தைப் படித்து முடிக்கச் சாதாரண மாணவர்களுக்கு எவ்வளவு காலமாகிறதோ அதைவிடக் குறைவான காலத்தைத் திறனாண்மைக் குழந்தைகளுக்கு வைத்தல் விரைவுக் கல்வித்திட்டம் (Acceleration Programme) எனப்படும்.
- ஒரு வகுப்பிலிருந்து அடுத்த வகுப்பிற்குத் தேர்ச்சி வழங்காமல் அதற்கடுத்த உயர் வகுப்பிற்குத் தேர்ச்சி தருவது, இரண்டு வகுப்புப் பாடங்களை இணைத்து ஒரே வகுப்பில் கற்பிப்பது. கோடைகாலக்கல்வி தந்து தேர்ச்சி அளிப்பது போன்றவை விரைவுக் கல்வித் திட்டத்தில் இடம் பெறும்.

**3. குழுவகைக் கல்வித்திட்டம்**

- ஒரே மாதிரியான அறிவாண்மையும் கற்கும் திறனும் உடைய மாணவர்களை ஒரு குழுவாக வகைப்படுத்தி அவர்களை ஒரு வகுப்பறையிலேயே வைத்துக் கற்றுத்தருதல் குழுவகைக் கல்வித்திட்டம் (Grouping Programme) எனப்படும்.
- இக்கல்விச் செயல்திட்டத்தில், திறனாண்மை மாணவர்கள் ஒரு வகுப்பறையிலும், சராசரி மாணவர்களைவிடக் குறைவான அறிவாண்மையுடைய மாணவர்கள் வேறொரு வகுப்பிலும் கல்வி பயிலுவர். அவர்களின் இயல்புக்கேற்றவாறு பாடச்செயல்கள் அமைத்துத் தரப்படும்.
- திறனாண்மை மாணவர்களுக்கு வளமைக் கல்வித்திட்டமும், விரைவுக் கல்வித்திட்டமும் பயனளிப்பதாக ஆராய்ச்சி முடிவுகள் கூறுகின்றன. குழுவகைக் கல்வித் திட்டமானது திறனாண்மையுள்ள மாணவர்களுக்கு ஓரளவு பயனளித்த போதிலும், உடன் பயிலும் மாணவர்களைச் “சராசரி மாணவர்கள்” என்றும் “சராசரிக்கும் குறைந்த மாணவர்கள்” என்றும் பிரித்து வைப்பது இடத்திட்டத்தின் குறைபாடாகும்.

**திறனாண்மைக் குழந்தைகளை கையாளும் ஆசிரியரின் பண்புகள்**

திறனாண்மைக் குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்குச் சில சிறப்புப் பண்புகள் இருத்தல் அவசியம். அவை,

1. கற்பித்தலில் வல்லமை
2. ஏற்கும் இயல்பும், திறந்த மனமும்
3. திறனாண்மையுள்ள மாணவர்களின் சிக்கல்களைப் புரிந்து நடந்துகொள்ளும் தன்மை.
4. நிறையாளுமை, மனமுதிர்ச்சி, தன்னம்பிக்கை இருத்தல்
5. பொறுமை, உற்று அறிதல், நகைச்சுவையுணர்வு கருத்து பரிமாற்றத்திறன் ஆகியன இருத்தல்.
6. கற்பித்தலிலும் மாணவர்களிடமும் மிகுந்த அக்கறையை வெளிப்படுத்துதல்
7. அறிவாண்மையும், ஆக்குமையும் சிறந்திருத்தல்.